செ.வெ.எண்-69 நாள்-25.02.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் தொழில் முனைவோர் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.02.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 40 முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் கலந்து கொண்டு 15 கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

இக்கூட்டத்தில் 09 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் சிறார்களுக்கு மொத்தம் ரூ.1,44,220/- மதிப்பிலான கல்வி உதவித்தொகை, திருமண மானியம், கண் கண்ணாடி நிதியுதவி மற்றும் வீட்டு வரி மீளப்பெறுதல் போன்ற நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், இக்கூட்டத்தில் மாவட்ட தொழில் மைய துணை இயக்குநர் திருமதி.யு.லட்சுமி அவர்கள் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து கருத்துரை வழங்கினார். லெப்.கமாண்டர். தி.சங்கீதா(ஓய்வு), துணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நலன், அரியலூர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கினில் முன்னாள் படைவீரர்கள் பெருவாரியாக கலந்துக் கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட தொழில் மைய துணை இயக்குநர் லட்சுமி, துணை இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) தி.சங்கீதா (ஓய்வு) மற்றும் அரசு அலுவலர்கள், முன்னாள் படைவீரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**